ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 4.1 – ஒரு நாயகம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமானுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4.1 – ஒரு நாயகம்

‡ ஒரு நாயகமாய் ⋆
ஓட உலகுடன் ஆண்டவர் ⋆
கரு நாய் கவர்ந்த காலர் ⋆
சிதைகிய பானையர் ⋆
பெரு நாடு காண ⋆
இம்மையிலே பிச்சை தாம் கொள்வர் ⋆
திருநாரணன் தாள் ⋆
காலம் பெறச் சிந்தித்துய்ம்மினோ ‖ **4.1.1** ‖

உய்ம்மின் திறை கொணர்ந்து ⋆
என்றுலகாண்டவர் ⋆
இம்மையே தம் இன் சுவை மடவாரைப் ⋆
பிறர் கொள்ளத் தாம் விட்டு ⋆
வெம்மின் ஒளி வெயில் ⋆
கானகம் போய்க் குமை தின்பர்கள் ⋆
செம்மின் முடித் திருமாலை ⋆
விரைந்தடி சேர்மினோ ‖ **4.1.2** ‖

அடி சேர் முடியினர் ஆகி ⋆
அரசர்கள் தாம் தொழ ⋆
இடி சேர் முரசங்கள் ⋆
முற்றத்தியம்ப இருந்தவர் ⋆
பொடி சேர் துகளாய் போவர்கள் ⋆

ஆதலின் நொக்கெனக் ⋆
கடி சேர் துழாய் முடிக் ⋆
கண்ணன் கழல்கள் நினைமினோ ॥ **4.1.3** ॥

நினைப்பான் புகில் ⋆
கடல் எக்கலின் நுண் மணலில் பலர் ⋆
எனைத்தோர் உகங்களும் ⋆
இவ்வுலகாண்டு கழிந்தவர் ⋆
மனைப்பால் மருங்கற ⋆
மாய்தல் அல்லால் மற்றுக் கண்டிலம் ⋆
பனைத் தாள் மத களிறட்டவன் ⋆
பாதம் பணிமினோ ॥ **4.1.4** ॥

பணிமின் திருவருள் என்னும் ⋆
அஞ்சீதப் பைம் பூம் பள்ளி ⋆
அணி மென் குழலார் ⋆
இன்பக் கலவி அமுதுண்டார் ⋆
துணி முன்பு நாலப் ⋆
பல் ஏழையர் தாம் இழிப்ப செல்வர் ⋆
மணி மின்னு மேனி ⋆
நம் மாயவன் பேர் சொல்லி வாழ்மினோ ॥ **4.1.5** ॥

வாழ்ந்தார்கள் வாழ்ந்தது ⋆
மா மழை மொக்குளின் மாய்ந்து மாய்ந்து ⋆
ஆழ்ந்தார் என்றல்லால் ⋆
அன்று முதல் இன்றறுதியா ⋆
வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர் ⋆
என்பதில்லை நிற்குறில் ⋆

ஆழ்ந்தார் கடற்பள்ளி ⋆
அண்ணல் அடியவர் ஆமினோ ॥ **4.1.6** ॥

ஆமின் சுவை அவை ⋆
ஆறோடடிசில் உண்டார்ந்த பின் ⋆
தூ மென் மொழி மடவார் இரக்கப் ⋆
பின்னும் துற்றுவார் ⋆
ஈமின் எமக்கொரு துற்றென்று ⋆
இடறுவர் ஆதலின் ⋆
கோமின் துழாய் முடி ⋆
ஆதியம் சோதி குணங்களே ॥ **4.1.7** ॥

குணம் கொள் நிறை புகழ் மன்னர் ⋆
கொடைக்கடன் பூண்டிருந்து ⋆
இணங்கி உலகுடன் ஆக்கிலும் ⋆
ஆங்கவனை இல்லார் ⋆
மணம் கொண்ட போகத்து மன்னியும் ⋆
மீள்வர்கள் மீள்வில்லை ⋆
பணம் கொள் அரவணையான் ⋆
திருநாமம் படிமினோ ॥ **4.1.8** ॥

படி மன்னு பல் கலன் ⋆
பற்றோடறுத்து ஐம் புலன் வென்று ⋆
செடி மன்னு காயம் செற்றார்களும் ⋆
ஆங்கவனை இல்லார் ⋆
குடி மன்னும் இன் சுவர்க்கம் எய்தியும் ⋆
மீள்வர்கள் மீள்வில்லை ⋆

கொடி மன்னு புள் உடை ⋆
அண்ணல் கழல்கள் குறுகுமினோ ॥ **4.1.9** ॥

குறுக மிக உணர்வத்தொடு நோக்கி ⋆
எல்லாம் விட்ட ⋆
இறுகல் இறப்பென்னும் ஞானிக்கும் ⋆
அப்பயன் இல்லையேல் ⋆
சிறுக நினைவதோர் பாசம் உண்டாம் ⋆
பின்னும் வீடில்லை ⋆
மறுகல் இல் ஈசனைப் பற்றி ⋆
விடாவிடில் வீடஃதே ॥ **4.1.10** ॥

‡ அஃதே உய்யப் புகும் ஆறென்று ⋆
கண்ணன் கழல்கள் மேல் ⋆
கொய் பூம் பொழில் சூழ் ⋆
குருகூர்ச் சடகோபன் குற்றேவல் ⋆
செய் கோலத்தாயிரம் ⋆
சீர்த் தொடைப் பாடல் இவை பத்தும் ⋆
அஃகாமல் கற்பவர் ⋆
ஆழ் துயர் போய் உய்யற் பாலரே ॥ **4.1.11** ॥

அடிவரவு — ஒருநாயகம் உய்ம்மின் அடிசேர் நினைப்பான் பணிமின்
வாழ்ந்தார்கள் ஆமின் குணங்கொள் படிமன்னு குறுக அஃதே பாலனாய்

ஒரு நாயகம் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்